www.tamilarangam.net

சிறுவர்

# மருதம்

19.3.1996

ண்ணம்: 7

எண்ணம்: 3



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை.

KINDER LITERARISCHES MAGAZIN

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழ்வைத் தா!

எதிரே கண்ணில் தெரிகின்ற
இருபத்து ஒன்றாம் நூற்றாண்டே
வருக வருக நீ வருக
வையம் செழிக்க வரம் தருக!

உன்னுள் நுழையும் தலைமுறையின்
உள்ளம் முழுக்க வயலாக்கி
உலகம் எல்லாம் ஒன்றென்னும்—நல்ல
ஒருமைப்பாட்டை விளைவாக்கு!

உழைத்தே எதையும் பெற்றிடவும்
ஓசிப் பழக்கம் தவிர்த்திடவும்
உன்னுள் நுழையும் எல்லார்க்கும்—மெய்
ஊக்க சக்தி நீ வழங்கு!

அறிவின் திறத்தால் நாள் தோறும்
ஆயிரம் புதுமை செய்தாலும்
அழிவின் திசைக்கே போகாமல்—மக்கள்
ஆக்கம் காக்க ஊக்கம் தா!




வறுமை ஒழிய வளம் நிறைய
வாழும் உயிர்கள் மகிழ்ந்திருக்க
எதனைச் செய்ய வேண்டுமென—நீ
எல்லோருக்கும் சொல்லித் தா!

www.tamilarangam.net

எதிரே கண்ணில் தெரிகின்ற
இருபத்து ஒன்றாம் நூற்றாண்டே......
உன்னுள் நாங்கள் வரவுள்ளோம்-எமக்கு
ஒளிமயமான வாழ்வைத் தா!
-நா. பொன்ராசன்.-

## விசுவாசம்



ராவுத்தர் சவுதி அரேபியாவிலேயே பெரிய பண்ணை வைத்திருந்தார். பண்ணையை அவரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவருடைய மகனான காசிமும் கவனித்து வந்தனர். உயர்ந்த ஜாதி ஒட்டகங்கள் மூன்று அவரிடம் இருந்தன. ஒன்றை வீட்டு வேலைக்கும், இரண்டு ஒட்டகங்கள் தமக்கும் மகனுக்குமாக வைத்திருந்தார். இயற்கையாகவே நல்லவரான ராவுத்தர் ஒட்டகங்களைப் பிள்ளைகளைப் போலவே பாவித்து வந்தார்.

பண்ணைக்கும் வீட்டுக்கும் இடையில் பாலைவனம் இருந்தது. ஒட்டகங்கள் பொதி சுமக்கவும், ஏறிச் செல்லவும் பயன் பட்டது. வீட்டில் உள்ள ஒட்டகம் பெண்ணாக இருந்ததால் குட்டி ஈன்றிருந்தது. இதனால் மற்ற இரண்டு ஒட்டகங்களுக்கும் சரியான வேலை. ராவுத்தரின் ஒட்டகத்திடம் மற்ற ஒட்டகம் கவலைப் பட்டுக் கொண்டது. "நாங்களும் பெண்ணாகப் பிறந்திருக்கலாம். வேலைப் பளுத் தாங்க முடியவில்லை. நாங்கள் இருவருமே எங்கேயாவது ஓடி விடுவோம்" என்றது.

ராவுத்தரின் ஒட்டகம் எசமானிடம் விசுவாசம் கொண்டது. எனவே மற்ற ஒட்டகத்தைப் பார்த்து "நண்பனே, நமக்கு எசமான் ஏதும் குறை வைத்தாரா?. இல்லையே? நேரத்துக்கு உணவு தருகிறார். ஓய்வு தருகிறார். தன் மக்களைப் போல அன்போடு வைத்திருக்கிறார் வேறென்ன வேண்டும்!

www.tamilarangam.net

ஏன் தேவையில்லாமல் சலித்துக் கொள்கிறாய்?" என்றது. அதற்கு மற்ற ஒட்டகம் "நீ எக்கேடாவது கெட்டுப் போ. நான் சமயம் பார்த்து ஓடிவிடப் போகின்றேன்" என்றது.

ஒரு நாள் வழமை போலவே ராவுத்தரும் காசிமும் பாலைவனத்தைக் கடந்து வரும்போது இடைவழியில் இளைப்பாறுவதற்காக ஒட்டகங்களை விட்டு இறங்கினர். அந்த சமயத்தில் காசிமின் ஒட்டகம் மெல்ல மெல்ல மேய்வது போல நடித்து விட்டு ஓடி விட்டது. தூக்கம் கலைந்து எழுந்த ராவுத்தரும் மகனும் ஒட்டகம் ஓடிப் போய் விட்டதைக் கண்டனர். "அப்பா, உங்கள் ஒட்டகம் எவ்வளவு விசுவாசமாக இருக்கிறது. என் ஒட்டகம் ஓடியே போய் விட்டது" என்று கவலைப் பட்டான்.

"அது ஓடிப் போயிற்று. அதை எப்படியாவது காப்பாற்ற வேண்டும். கழுதைப்புலி கண்டால் அதன் வாழ்வே முடிந்து விடும். இந்த ஒட்டகத்திலேயே ஏறிக் கொள். தேடிக் கண்டு பிடித்து விடுவோம்." என்றார் ராவுத்தர். அவரின் பெருந்தன்மையைக் கண்ட ஒட்டகத்திற்கு மேலும் அவரின் மீது அன்பு ஏற்பட்டது. "அன்பை உணராத முட்டாள். எங்கே கஷ்டப் படுகிறதோ!" என்று காசிமின் ஒட்டகத்தை நினைத்துக் கொண்டது. ஒட்டகத்தைத் தேடிக் கொண்டு புறப்பட்டனர்.

www.tamilarangam.net

ஓடிய ஒட்டகம் தன் சுதந்திரத்தை எண்ணி ஆனந்தத்துடன் ஓடித் திரிந்தது. ராவுத்தரின் ஒட்டகத்தை "முட்டாள், என்னுடனேயே ஓடி வந்திருக்கலாம்" என்று நினைத்தது. தாகமெடுக்கவே, சுனையைத் தேடி நடந்தது. அதை ஒரு கழுதைப்புலி கண்டு கொண்டது. பசிக்கு நல்ல உணவு கிடைத்தது என எண்ணிக் கொண்டு கழுதைப்புலி அதனை விரட்டலாயிற்று. அப்போது தான் ஒட்டகத்துக்குத் தன் நிலைமை புரிந்தது. ஓடியது. கழுதைப்புலியும் விடுவதாக இல்லை. களைத்து விட்ட ஒட்டகம் எசமானுக்குத் துரோகம் இழைத்ததை மட்டுமல்ல, சுதந்திரம் என்பது கூட துன்பம் தரக் கூடியது என்றும், கட்டுப்பட்டிருந்தாலும், எசமானோடு தான் பாதுகாப்பாக வாழ்ந்திருக்கலாம் என்றும் உணர்ந்து கொண்டது.

"டுமில்" என்ற துப்பாக்கி வேட்டுச் சத்தமும் கழுதைப்புலியின் அலறல் சத்தமும் கேட்டது. தன் எசமானர்கள் இருவரும் ஒட்டகத்துடன் வருவதைக் கண்டதும் ஓடிச் சென்று அவர்களைச் சரணடைந்தது. "நல்லவேளை பிழைத்தாய். சிறிது நேரம் தாமதித்து எசமான் வந்திருந்தாலும் உன் உயிர் பிரிந்திருக்கும்" என்றது விசுவாமுள்ள ஒட்டகம். "உண்மை தான் நண்பனே,

www.tamilarangam.net

நான் தான் நன்றி மறந்து விட்டேன். இனி விசுவாசத்துடன் நடந்து கொள்வேன். என்று கூறியது காசிமின் ஒட்டகம். அன்று முதல் நன்றாக உழைத்து எசமானிடம் விசுவாசமாக வாழ்ந்து கொண்டது.

# ஒளி தரும் விளக்குகள்

"நாளைக்குக் கார்த்திகை தீபமல்லவா?. இரவெல்லாம் பகல் போல இருக்கும். உங்களுக்கும் கொண்டாட்டம் தான்" என்றார் தாத்தா. "உண்மை தான்" என்றவாறே யோசனை செய்தான் விமலன். சிறிது நேரம் சென்றதும் தாத்தாவிடம் "தாத்தா, நாங்கள் இரவில் "லைற்' இருப்பதால் பயப்படாமல் இருக்கிறோம். ஆதிகாலத்தில் வாழ்ந்த மனிதன் எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பான்." என்றான். தாத்தா மெல்லச் சிரித்தார். தாத்தா, உங்களுக்குக் கதை மட்டும் தான் சொல்லத் தெரியுமா?. விளக்குகள் எப்படி உண்டாயின? என்று சொல்லுங்கள் என்றான்.

"தொடக்க காலத்தில் மனிதன் இருட்டைக் கண்டு பயந்தான். குகைகளை இருப்பிடமாக்கி வாழும்போது நெருப்பைப் பற்றி அறிந்து கொண்டான்." என்றார் தாத்தா. "அது எனக்குத் தெரியுமே!" என்று சொன்ன விமலனைப் பார்த்துத் தாத்தா " தாத்தா கதைக்கும் போது இடையே எதுவும் பேசக்கூடாது என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெரியுமல்லவா?" என்றார். "மன்னித்துக் கொள்ளுங்கள் தாத்தா. இனி ஒன்றும் கதைக்கவில்லை" என்றான் விமலன். தாத்தா ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். அவர் பேசும்போது குறுக்கே பேசுவது அவருக்குப் பிடிக்காது.

தாத்தா தொடர்ந்தார். குளிரைப் போக்குவதற்கு நெருப்பைக் கண்டு பிடித்தான். நெருப்பில் இருந்து உண்டான ஒளி இருளைப் போக்குவதையும் கண்டு பிடித்தான். கொடிய மிருகங்களிடம் இருந்து பாதுகாக்கவும் நெருப்பு உதவியது. நெருப்பு அணைந்து விடாமல் இருக்க மிருகக் கொழுப்பைக் கண்டு பிடித்தான். எண்ணெய் ஊற்றி நெருப்பை எரித்தபோது கூடுதலான

www.tamilarangam.net

வெளிச்சம் தருவதைக் கண்டு கொண்டான்.

எண்ணெய்யைத் தேக்கி வைத்து எரித்தால் நிரந்தரமாக வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற சிந்தனை ஏற்பட்டது. குழிவுள்ள கற்களில் எண்ணெய் ஊற்றி எரித்தான். களிமண் கண்டு பிடித்ததும், களிமண்ணைக் குழிவாக்கி எண்ணெய் தேக்கி வைத்து எரித்தான். குடிசையில் வாழத் தொடங்கியதும், அடுப்பு நெருப்பைத் துணையாகக் கொண்டான். பின்பு காய்ந்த நாணல் புற்களை ஒன்றாகத் திரியாக்கி, களிமண்ணில் அழகான வடிவமைத்து, விளக்குகளை எரியூட்டப் பழகிக் கொண்டான்.



இதை முதலில் ரோமானியர்களே கண்டு பிடித்தனர். பின்பு இரும்பு, தாமிரம், வெண்கலம் கண்டு பிடிக்கப் பட்டதும், விளக்குகள் பலவித வடிவங்கள் கொண்டன. குத்துவிளக்குகள், அகல்விளக்குகள், தொங்கும் தூண்டாமணி விளக்குகள் இப்படி வகைகள் தோன்றின. தாவர எண்ணெய் கண்டு பிடித்ததும் மிருகக் கொழுப்பு இல்லாமல் போய் விட்டது. பஞ்சைத் திரித்து விளக்கில் வைத்து ஒளியூட்டினான்.

பின்பு மெழுகுவர்த்திகள் புழக்கத்துக்கு

www.tamilarangam.net

வந்தன. இக்கால கட்டத்தில் ஆலயங்கள், மண்டபங்கள் எல்லா இடத்திலும் பெரிய விளக்குகள் ஒளியைக் கொடுத்தன. நம் நாட்டில் எண்ணெய் விளக்குகளே இன்றும் புழங்கி வருகின்றன. மின்சாரம் முதலிடத்தை அடைந்தபோதும் மெழுகுவர்த்திகளும், எண்ணெய் விளக்குகளுமே புனிதத்தன்மை கொண்டவைகளாக ஆலயங்களில் இருந்து வருகின்றன.

பதினேழாம் நூற்றாண்டுகளில் மண்ணெண்ணெய் இடம் பிடித்துக் கொண்டது. விளக்குகளின் வடிவங்களும் மாறுதல் பெற்றது. கண்ணாடிகள் "சிமினி" வலம் வந்தன. இந்த விளக்குகள் மற்றைய விளக்குகளை விட கூடுதல் ஒளியைப் பரவச் செய்தன. 1798இல் வில்லியம் முர்டாக் என்பவர் வாயுவினால் எரியும் விளக்கைக் கண்டு பிடித்தார். தொழிற்சாலைகள், திரையரங்குகள் போன்றவற்றை இந்த விளக்குகள் இடம் பிடித்தன.

பின்பு மின்சாரத்தின் வரலாற்றைத் தான் உனக்குத் தெரியுமே! ஸ்விச்சை அழுத்தியதும் வெளிச்சம் வருகிறதே. இருட்டு வருகிறது. லைற்றைப் போடு" என்று தாத்தா முடிக்கவும், வீட்டுக்குள் இருந்து அம்மாவின் அழைக்கும் குரல் கேட்டது. விமலன் அம்மாவிடம் சென்றான்.

www.tamilarangam.net

# மகாபாரதம்

ᤣᤣᤣ இவ்வளவு காலமும் ஔவையாரைப் பற்றிய தொடரில் ஔவையாரின் வாழ்க்கையையும், அவர் தமிழுக்குச் செய்த தொண்டுகளையும் அறிந்து கொண்டீர்கள். காலங்காலமாக வாழும் கிரேக்க, ரோமர்களின் இதிகாசங்களான "ஈலியட், ஒடிசி" போன்று, இந்துப் பண்பாட்டைக் கொண்டிருக்கும் நாங்களும் காலங்காலமாக வாழும் இதிகாசங்களைக் கொண்டிருப்பதால் பெருமை கொள்கிறோம். இதிகாசங்கள் உண்மையானவைகளா?, பொய்யானவைகளா? என்ற ஆராய்ச்சிகளை விடுத்து அவைகள் கூறும் நீதிகளையும், வாழ்க்கை முறைகளையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

மக்களை நல்வழிப் படுத்தவே இவைகள் காலங்காலமாக மக்களிடையே பரிச்சயப் படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அதனால் தான் இவை இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இதிகாசங்களில் ஒன்றான மகாபாரதம் வியாசமுனிவர் என்னும் அறிஞரால் இயற்றப்பட்ட காவியமாகும். இது ஒவ்வொரு தேசத்தவரின் மொழி, வாழ்க்கை நெறிகளுக்கு ஏற்றதாக அந்தந்த நாட்டு அறிஞர்களால் எழுதப் பட்டது.

www.tamilarangam.net

இந்தோனேசியா, பர்மா, பார்லித்தீவு போன்ற எல்லா நாடுகளிலும் இக் காவியங்கள் (இதிகாசங்கள்) பழக்கில் இருக்கின்றன. நம் தமிழ் மொழியிலும் வில்லிபுத்தூர் ஆழ்வார் என்பவரால் மகாபாரதம் எழுதப் பட்டது. இந்தக் காவியத்தை இலகுவான தமிழில் அந்நிய கலாச்சார பூமியில் வாழும் சிறுவர்களாகிய நீங்களும் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக, மகாபாரதக் கதைகள் இந்த இதழில் இருந்து தொடராக வருகிறது ,,,

முன்னொரு காலத்தில் பரதன் என்றொரு அரசன் இருந்தான். அவன் முன்னோர்கள் புகழ் பெற்ற சந்திர குலத்தைச் சேர்ந்தவர்கள். பரதன் மிகுந்த வீரமுள்ளவன். சத்தியம் தவறாதவன். அவன் ஆண்ட காலத்தில், நாடு செழிப்புற்றது. மக்களைத் தன் கண்ணைப் போல அவன் காத்து வந்தான். அவன் புகழ் எல்லாவிடமும் பரவியது. அவன் நாடும் பாரத நாடு என்றழைக்கப் பட்டது. அவனுக்குப் பின்னால் ஆண்ட அரசர்களும் நாட்டை நல்ல முறையில் ஆட்சி செய்தார்கள். அத்தி என்னும் அரசன் நாட்டை மேலும் சீர் திருத்தினான்.

www.tamilarangam.net



அவன் யானையைப் போன்ற பலம் கொணடவன். யானைப்படையும் அவனிடம் கூடுதலாக இருந்தது. அத்தி என்றும் யானைக்குப் பெயருண்டு. தனக்கென்று தலைநகரம் ஒன்றை அமைத்தான். அத்தினாபுரம் என்று தலைநகருக்குப் பெயரும் சூட்டினான். அவன் அரசர்களுக்கு வழிகாட்டியாக வாழ்ந்தமையால் அவனும் அவனுக்குப் பின்

www.tamilarangam.net

வாழ்ந்தவர்களும் குரு குலத்தவர்கள் என்று அழைக்கப் பட்டார்கள்.

புகழ் பெற்ற குரு குலத்தில் சந்தனு என்னும் அரசன் ஆண்டு வந்தான். இவன் ஆறுகளின் தெய்வமான கங்கையைத் திருமணம் செய்தான். திருமணத்தின் முன் கங்கை அவனிடம், தான் செய்யும் காரியங்களுக்குத் தடை போடக் கூடாது என்றும், தடுத்தால் தான் பிரிந்து போய் விடுவேன் என்றும் கூறியிருந்தாள். மிகவும் மகிழ்ச்சியாக அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. சந்தனு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான்.

ஆனால் அவனது மகிழ்ச்சி நீடிக்கவில்லை. குழந்தை பிறந்ததும், கங்கை குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியேறினாள். சந்தனுவும் பின்னே சென்றான். ஆற்றை நோக்கி நடந்த கங்கை குழந்தையை ஆற்றில் போட்டு விட்டுத் திரும்பினாள். சந்தனு திகைத்தான். கங்கைக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ!. அவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அவள் தான் திருமணத்தின் போது தான் செய்பவைகளுக்குத் தடை போடக் கூடாது என்று கூறியிருக்கிறாளே! அரசனால் என்ன செய்ய முடியும்?.

www.tamilarangam.net

கங்கையின் முகத்தில் மாறுதல் எதுவும் இல்லை. எதுவுமே நடக்காதது போல நடந்து கொண்டாள். திரும்பவும் அரண்மனைக்கு வந்தாள். மகிழ்ச்சியுடன் இருந்தாள். சிலகாலத்தில் பின் மீண்டும் குழந்தை பெற்றாள். அக்குழந்தையையும் ஆற்றில் போட்டாள். இப்படியே தான் பெற்ற ஆறு குழந்தைகளையும் ஆற்றில் போட்டு விட்டாள். அரசனோ மக்கள் இல்லாமல் வேதனைப் பட்டான். அடுத்துப் பிறக்கும் குழந்தையையாவது காப்பாற்ற எண்ணினான். ஏழாவது குழந்தையும் பிறந்தது.

–வளரும்–


## வாகனங்களின் கதை



சென்ற இதழில் ரெயில்களின் வளர்ச்சியை அறிந்தீர்கள். கட்டணச் செலவு கூடுதலான நிலையில் ரெயில் பயணங்கள் எல்லா மக்களாலும் மேற்கொள்ள முடியாது. குறிப்பிட்ட தூரத்தை அடைவதற்குக் கால்நடையாகவே செல்ல வேண்டி ஏற்பட்டது. இந்த நிலை, சைக்கிள்வண்டியின் வரவால் மாற்றமடைந்தது. மிகச் சாதாரண நிலையில் வாழ்பவர்களுக்கும் இது வசதியைக் கொடுத்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







www.tamilarangam.net

இன்று வரை மக்களிடையே கூடுதல் சேவையைச் செய்வது சைக்கிள் வண்டி தான்.

வசதியில் குறைந்தவர்களும் சரி, வசதி படைத்த பணக்காரர்களாயினும் சரி சைக்கிள் வண்டியைப் பாவித்து வருகின்றனர். வறுமைப் பட்ட நாடுகளில் மனைவி, மக்களை ஏற்றிச் செல்லும் வாகனமாகவும் சைக்கிள் பயன் படுகிறது. தற்போது நம் நாட்டில் போக்குவரத்துச் சேவையில் முக்கிய இடத்தைச் சைக்கிள் வகித்துக் கொண்டிருக்கிறது. தொடக்க காலத்தில் இருந்ததைப் போல இல்லாமல், சைக்கிள் வண்டியும் தன் அமைப்பை காலத்துக்குத் தக்கவாறு மாற்றிக் கொண்டது. சைக்கிளை முதல் முதல் உலகத்துக்குத் தந்த பெருமை இங்கிலாந்தைச் சேர்ந்த மார்க்மில்லன் [1839] என்பவரையே சேரும்.

சைக்கிளின் பரிணாம வளர்ச்சி மோட்டார் சைக்கிள் [Motor Bike] ஸ்கூட்டர், என்று வளர்ச்சி அடைந்துள்ளது. மனிதசக்தியினை விடுத்து, இயந்திரத்தில் இயங்கும் இந்த இரண்டு சக்கர வண்டிகள் நாகரீகமான பலவித வடிவங்களில் இன்று உலாவருகின்றன. சைக்கிளை விடவும் மிக வேகமாகச் செல்வதற்கு இந்த வண்டிகள் முதன்மை வகிக்கின்றன. 'காட்லீப் டைம்லர்' [Gottlieb Daimler -1885] என்ற ஜேர்மனியரே மோர்டார் சைக்கிளைக் கண்டு பிடித்தவர் ஆவார்.

-தொடரும்.-

www.tamilarangam.net

## வினாவிடைப் போட்டி

1.விதையில்லாத பழம் எது?

அன்பு, சன்னிதி, பன்னாடை, இறைச்சி

2.மகாத்மா காந்தி பிறந்த இடம் எது?

போலந்து, தயிர், அப்பம், தபசி, சந்தி, பதம், அல்லல்.

3.இலங்கையில் பிரசித்தி வாய்ந்த சிற்பங்கள் இவை என்பது உங்களுக்குத் தெரியுமா?

சிங்கம், மக்கி, பரிவு, ஆயாசம்.

4. கங்காரு வாழும் பூமி எது?

அன்னம், மாவுத்தன், பஸ்பம், ரேடியம், பல்லி, தயாளகுணம்.

5. பர்மா நாட்டின் தலைநகரம் எது?

ரங்கோலி, நுங்கு, நங்கூரம், பன்மை.

www.tamilarangam.net

தம்பிக்கு......



முருங்கை மரமோ வளர்ந்தோங்க
முளையை ஒடித்து விடுவார்கள்!

மூங்கில் நிமிர்ந்து ஒழுங்காக
மேலே கல்லை வைப்பார்கள்!

சுருளும் புடலங்காய் நீண்டு
தொங்கக் கல்லை முடிவார்கள்!

சுவையில் மிகுந்து பாலினிக்கச்
சுண்டக் காய்ச்சித் தருவார்கள்!

அறிவு ஒழுக்கம் வளர்ந்தோங்க
ஆசான் உன்னைக் கண்டித்தால்

பெரிதாய் எடுத்துக் கொள்ளாதே
பெற்றோர் வைதால் வருந்தாதே!

-பல்லவன்-

www.tamilarangam.net

# கவிமணி
# தேசிக விநாயகம் பிள்ளை

தமிழைக் கண்ணெனப் போற்றி வளர்த்தவர்களுள் "கவிமணி" தேசிக விநாயகம் பிள்ளையும் ஒருவராவர். இவர் இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்தார். தமிழார்வம் மிக்க குடும்பத்தில் பிறந்த தேசிக விநாயகம் பிள்ளை ஆரம்பக் கல்வியை மலையாள மொழியிலேயே கற்றார். தமிழின் மீது கொண்ட பற்றினால், கவிமணி அவர்கள் நண்பர்கள் சிலருடன் சேர்ந்து சாந்த லிங்கத் தம்பிரான் என்னும் தமிழறிஞரிடம் தமிழ் கற்றார். பள்ளிப் படிப்பைத் தவிர்ந்த ஓய்வு நேரங்களில் தமிழ்க்கல்வியைத் தொடர்ந்தார்.

கவிமணிக்குப் பத்தாவது வயதாகும் போது தந்தையார் காலமாகி விட்டார். அவ்வேளையில் கவிமணி ஆங்கிலப் பள்ளி ஒன்றில் கல்வி கற்கத் தொடங்கி இருந்தார். அவர் கவலையில் தளர்ந்து போகாமல் தாயார் ஆறுதலாக இருந்தார். அவ்வேளையிலும் பிள்ளை அவர்கள் தமிழ் கற்பதை விட்டு விடவில்லை. பதினைந்து வயதாகும் போது தமிழில் சிறந்த புலமையும், பாடல்கள் இயற்றும் ஆற்றலும் பெற்றிருந்தார்.

இவரது கவித்திறனைக் கண்ட இவரது தமிழாசிரியரான சாந்தலிங்கத் தம்பிரான் அவர்கள் அங்கு கோயிலில் எழுந்தருளி இருக்கும் அழகம்மை மீது

www.tamilarangam.net

பாடல்கள் எழுதும்படி வேண்டினார். அவரின் விருப்பப் படியே "அழகம்மை ஆசிரிய விருத்தம்" என்னும் நூலை இயற்றினார். இதுவே கவிமணியின் முதல் நூல் ஆகும். பின் தம் குல தெய்வமான அழகிய மணவாள விநாயகர் மீதும், சுசீந்திரத்திலுள்ள சிவன்கோயில் மீதும் பாடல்கள் பாடினார்.

தமிழ்மொழி ஆர்வம் இருந்தது போலவே இவருக்கு இந்திய வரலாற்றிலும் ஆர்வம் இருந்தது. "காந்தளூர்ச் சாலை" என்னும் ஆராய்ச்சி நூலை ஆங்கில மொழியில் வெளியிட்டார். அந்த நூலின் மூலம் பிள்ளை அவர்களின் ஆங்கிலப் புலமையும், வரலாற்றுப் புலமையும் வெளிப்பட்டன. குடும்பச் சூழ்நிலை காரணமாக மேற்படிப்பைத் தொடர முடியவில்லை. இதனால் கோட்டாற்றில் உள்ள தொடக்கப்பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார்.

குழந்தைகளோடு குழந்தையாக வாழ்ந்து பழகிக் குழந்தைகளைக் கவர்ந்தார். சிறந்த ஆசிரியர் என்று பலராலும் விரும்பப் பட்டார். இவரின் திறமையை அறிந்த அரசாங்கம் இவரை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியராக்கியது. பின் திருவனந்தபுரம் உயர் நிலைப்பள்ளி ஆசிரியராகவும் கடமையாற்றினார். இக் காலத்திலேயே அங்குள்ள மகளீர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் ஆனார். ஓய்வு பெறும்வரை இப் பதவியிலேயே இருந்தார்.

www.tamilarangam.net

கவிமணியால் இயற்றப்பட்ட நூல்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். கவிதைநூல்கள், இசைப்பாடல்கள், உரைநடைநூல்கள் என பிரித்துக் கொள்ளலாம். மலரும் மாலையும், ஆசியஜோதி, உம்மர்கய்யாம் பாடல்கள், நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் என்பன கவிதை நூல்கள் ஆகும். மலரும் மாலையும் இயற்கை வர்ணனைகளையும், தத்துவக் கருத்துக்கள் கொண்ட பாடல்களையும், குழந்தைகளுக்கான பாடல்களையும் கொண்டது. "ஆசியஜோதி ஆங்கில மொழியிலிருந்தும், உம்மர் கய்யாம் பாடல்கள்" பாரசீய மொழியில் இருந்து மொழி பெயர்க்கப் பட்ட தாகும்.

பல தமிழிசைப் பாடல்களையும் இயற்றினார். கவிமணியின் உரைமணிகள் என்பது இவர் எழுதிய கட்டுரைகளை உள்ளடக்கியதாகும். இவரது பாடல்கள் மிகவும் எளிமையானவை. மென்மையானவை, கவிமணியின் பாடல்கள் படித்தால் அதில் அவரது அன்பு, அடக்கம், எளிமை, இரக்கருணம் எல்லாமே புரிந்து விடும். குழந்தைகள் பள்ளியிலும், பெண்கள் பாடசாலையிலும் பணியாற்றி வந்ததால் இயற்கையாகவே எல்லோருடனும் வாஞ்சையுடனே பழகி வருந்தன்மை இவரிடம் காணப்பட்டது. பாரதியாரின் பாடல்களில் மிகவும் விருப்பம் உள்ளவர்.

பாட்டுக்கொரு புலவன் பாரதி,அடா—அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினான், அடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே,அடா....... என்று

புகழ்ந்து பாரதியும் பட்டிக்காட்டானும் என்ற கவிதையில்

www.tamilarangam.net

இவர் பாடியிருக்கிறார். 1940ம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் இவருக்குக் "கவிமணி" என்னும் பட்டம் அளிக்கப் பட்டது. அன்று முதல் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை என்று அழைக்கப்பட்ட போதும் இவருக்குக் "கவிமணி" என்ற சிறப்புப் பெயரே நிரந்தரமாகி விட்டது.

கவிமணியின் பாடல்கள் தென்றல் காற்றைப்போல இதமானவை. குழந்தைகளுக்காக இவர் எழுதிய கவிதைகள் இவரது குழந்தை உள்ளத்தை வெளிப்படுத்துவன. இவர் இயற்றிய குழந்தைப் பாடல் ஒன்றைப் பாருங்கள். குழந்தையின் செயல்களை எப்படி அழகாக வர்ணித்திருக்கிறார் பாருங்கள்.

தோழா எனக்கொரு பாப்பா உண்டு
தொட்டில் தானதன் வீடாகும்
விழாமல் அதனை அணைத்திவேன்
விளையாட்டெல்லாம் காட்டிடுவேன்

கையைக் கையை ஆட்டுமெடா—அது
காலை மடக்கி நீட்டுமெடா
பெய மெல்ல அடியெடுத்து
பாரினில் நடந்து உலவுமெடா

புத்தகம் தன்னைக் கிழிக்குமெடா—அது
பொருள்களை வாரி எறியுமெடா
எத்தனை குற்றம் செய்தாலும்
அதன்மேல் எல்லோருக்கும் பட்சமெடா

www.tamilarangam.net

தமிழ் அறிஞரான கவிமணி அவர்கள் (1876–1954) தமது எழுபத்தியெட்டாவது வயதில் இயற்கை எய்தினார். அவர் இன்று நம்மிடையே வாழாமல் விட்டாலும் அவருடைய பாடல்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

## சிங்கம்

சிங்கம் காட்டில் வசிக்கும் மிருகம் என்பது உங்களுக்குத் தெரியும். இதனைப் பற்றிய பலகற்பனைக் கதைகள் உண்டு. குழந்தைகளுக்கான கதைகளிலும், பக்திக் கதைகளிலும், நீதிக் கதைகளிலும் சிங்கத்தின் பலத்தைப் பற்றியும், அதன் நேர்மையான குணங்கள் பற்றியும் கூறப்பட்டிருக்கின்றன. பிடரி மயிருடன் கூடிய இதன் கம்பீரமான முகத் தோற்றமும், இதன் கர்ச்சனையின் ஒலியும், எதற்கும் பயங்கொள்ளாத மூர்க்கத்தனமுமே இதற்குக் காரணமாகும். சிங்கத்தை மிருகங்களுக்கு அரசன் என்று அழைத்தாலும், அந்தச் சிறப்புக்கு உரியது வேங்கை தான். சிங்கத்தை விடவும் உருவத்தில் பெரியது. பலம் கொண்டது. அழகிய கம்பீரம் கொண்டது வேங்கைதான். சிங்கமும் வேங்கையும் சண்டையிட்டால் வேங்கையே வெற்றி பெறும்

www.tamilarangam.net

என்கிறார்கள் மிருகவியல் வல்லுனர்கள். சிலவேளைகளில் சிங்கமும் வெற்றி பெற்றதுண்டு.



சிங்கங்கள் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் மட்டுமே காணப்படுகின்றன. ஆனாலும் சிங்கங்கள் ஐரோப்பா, ஈரான், எகிப்து போன்ற இடங்களில் இருந்திருக்கின்றன. தற்போது ஆசியாவிலும் அழிந்து வருகின்றன. இந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்திலுள்ள கீர் காட்டுப் பிரதேசங்களில் பரவலாகக் இவை காணப்படுகின்றன. இந்திய அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட்டு வரும் இனமாகச் சிங்கம் இருக்கின்றது. ஆப்பிரிக்காவில்

www.tamilarangam.net

எதிமோப்பியா, அல்ஜீரியா, கென்யா போன்ற இடங்களில் சிங்கங்கள் காணப்படுகின்றன.

ஆசியச் சிங்கத்தை விடவும் ஆப்பிரிக்கச் சிங்கங்கள் உருவத்தில் பெரியது. ஆப்பிரிக்காவில் சோமாலி நாட்டுச் சிங்கங்கள் உருவத்தில் சிறியவை. செனிகல் நாட்டு ஆண் சிங்கங்களுக்குப் பிடரிமயிர் இல்லை. சிங்கங்களின் பிடரிமயிர் மற்ற மிருகங்களுடன் போரிடும் போது கழுத்துப் பகுதியைப் பாதுகாக்கின்றது. சிங்கத்தின் நிறம் சிவப்புக் கலந்த பழுப்பு நிறமாகும். மண்ணிறத்திலும் சில சிங்கங்கள் இருக்கும். கறுப்புச் சிங்கங்கள் மிக அரிதாகக் காணப்படுகின்றன.

தங்களின் தோற்றத்துக்கு ஏற்றவாறு தம் இருப்பிடத்தைத் தேடிக் கொள்கின்றன. அதனால் அவை மிருகங்களைப் பிடிக்கவும், எதிரிகளைத் தாக்கவும், எதிரிகளிடம் இருந்து தப்பவும் முடிகின்றது. பகலில் நித்திரை செய்து இரவில் இரை தேடி உண்ணும் வழக்கம் கொண்டவையாக இருந்தாலும், பசித்தால் பகலிலும் வேட்டையாடி இரை உண்ணும். கூடுதலாக நீர் அருந்த வரும் மிருகங்களையே

www.tamilarangam.net

வேட்டையாடும். இதற்காக நீர் நிலைகளை சமீபித்த முட்புதர்களில் பதுங்கி இருக்கும்.

சிங்கங்கள் பெரிய மிருகங்களை வேட்டையாடுவதில்லை. யானை, நீர்யானை, ஒட்டகச்சிவிங்க பேன்றவற்றினி குட்டிகளை வேட்டையாடும். வேகமாகப் பாய்வதில் வல்லமை கொண்டது. ஒரே பாய்ச்சலில் 21 அடி வரை பாயும். மணித்தியாலத்திற்கு 40 மைல் வேகத்துடன் ஓடும். வேட்டையாடிய மிருகத்துடன் 6 அடி உயரமுள்ள மதில்களையே தாண்டி விடக் கூடியது. ஆனாலும் விரைவில் களைத்து விடும் தன்மை கொண்டது.

மிருகங்களைக் காலினால் ஒரே அடியில் வீழ்த்தி வீழ்த்தி விடும். காலின் பலம் மிகவும் கூடியது. ஒன்றாகச் சேர்ந்து மிருகங்களை வேட்டையாடும். தனித்தும் வேட்டையாடும். ஒன்றாக வேட்டையாடிக் கொன்ற மிருகங்களை உண்ணும் வேளையில் பெரிய சிங்கங்கள் சிறிய சிங்கங்களை தூர விரட்டி விடும். பெரிய சிங்கங்கள் தின்று மீதி இருந்தாலே சிறிய சிங்கங்களுக்குக் கிடைக்கும். இதனால் சிறிய சிங்கங்கள் பட்டினியால் இறந்து விடுகின்றன. வேட்டையில் பெண் சிங்கங்களே முதலிடத்தை

www.tamilarangam.net

வகிக்கின்றன. வேட்டையாடிய மிருகத்தைத் ஆண் சிங்கங்கள் பெண் சிங்கத்தை நெருங்க விடாமல் தானே முதலில் உண்ணும். மிகுதியே பெண் சிங்கத்துக்குக் கிடைக்கும்.

சிங்கம் புதிதாக வேட்டையாடிய இறைச்சியை உண்ணும் என்று நம்பப் படுகிறது. இதில் எந்த விதமான உண்மையும் இல்லை. அழுகிய இறைச்சியைக் கூடச் சிங்கம் உண்ணும். எலி, தேள், சிலந்தி போன்றவற்றைக் கூட உண்ணும். வயதான காலத்தில் ஒட்டகச் சிவிங்கிகளினால் உதைபட்டு நொண்டிகளான சிங்கங்கள் இரை தேட முடியாமல் புல்லைக் கூடத் தின்கின்றன. மற்றைய மிருகங்கள் பயந்து ஒதுங்குவது போல சிங்கங்கள் ஒதுங்குவதில்லை. நேராகவே மோதும் தன்மை கொண்டவை. சிறிய சிங்கங்களுடன் பகிர்ந்துண்ணாத தன்மையாலும், பயம் கொண்டு ஒதுங்காத தன்மையாலும் சிங்கங்களின் இனம் தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் இனமாக இருக்கின்றது.

## தந்திரக் கணக்குகள் சில:

1. 100ஒடு பத்தைக் கூட்டினால் 110 வரும் என்பது! உங்களுக்குத் தெரியும். 100ஐப் பத்தால் பெருக்கினால் 1000 வரும். எந்த எண்ணை 100உடன் கூட்டினால்,

www.tamilarangam.net

அந்த எண்ணினால் பெருக்கி வருவதை விடவும் பெரிய எண் கிடைக்கும்?.

2. மணி வீட்டில் இருந்து கோயிலுக்குச் செல்ல ஒரு மணித்தியாலமும், பதினைந்து நிமிடமும் பிடிக்கும். ஆனால் கோயிலில் இருந்து வீடு திரும்பும் நேரம் எழுபத்தைந்து நிமிடங்களே போதும். ஏனென்று உங்களுக்குத் தெரியுமா?.

3. அன்று கடும் வெயில். இரவு சந்திரன் அம்மாவிடம் சொன்னான். "அம்மா, இந்த வெயில் 72 மணித்தியாலங்களின் பின் இருக்காது." அம்மா சிரித்துக் கொண்டு "உனக்குப் பைத்தியமா?" என்றாள். ஆனால் சந்திரன் சொன்னது உண்மையாயிற்று. எப்படி?

தந்திரக் கணக்கு விடைகள்:

1 100ஐ 1ஆல் பெருக்கினால் 100தான் வரும். ஆனால் 100உடன் ஒன்றைக் கூட்டினால் 101 ஆகும்

2. கோயிலுக்குப் போகவும் வரவும் ஒரே நேரம் தான் செல்லுகிறது. 75 நிமிடங்களும் ஒருமணித்தியாலம் பதினைந்து நிமிடமும் ஒரே அளவு நேரம் தானே.

3. சந்திரன் சொன்னதில் தவறேதும் இல்லை. அவன் சொல்லிய நேரத்தில் இருந்து கணக்கெடுத்தால், 72 மணித்தியாலங்கள் (மூன்று நாட்கள்) சரிதானே.

www.tamilarangam.net

# படிக்க ஆசை

சின்னச் சின்ன ஆசை
சிறுவர் அமுதம் படிக்க ஆசை
முத்து முத்து ஆசை
முத்துத் தமிழ் படிக்க ஆசை

சின்னச் சின்னக் கதைகள் தந்து
சிறுவர் எம்மைப் படிக்கத் தூண்டும்
சிறந்த நல்ல கருத்துத் தரும்
சிறுவர் அமுதம் படிக்க ஆசை

வினாவிடைப் போட்டியுடன்
பயன் தரும் விடையங்களை
எளிதாக விளங்க வைக்கும்
சிறுவர் அமுதம் படிக்க ஆசை



-சுஜீவ் சண்முகலிங்கம்.-

www.tamilarangam.net


# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பு | ண் | ணி | ய | ம் | ன | ர | ப | ஆ | ணு |
| ணா | ர | ண் | கா | ந | து | த் | ழ | ல | கை |
| ய | ப | அ | ப் | ம | றி | ப் | பு | ழ | டி |
| ன் | த | த் | பு | ம் | ம | தி | ல | த் | ஞ |
| ர | க | ளு | ட | ச | ங் | க | ம் | து | றி |
| தி | ரு | பி | ளை | றி | ரை | வி | ச | றி | கை |
| த் | ம் | ர | து | த் | பு | கா | கி | த | ம் |
| பு | ன | இ | த | தி | ப் | ல | ப் | ரை | த |
| ரை | தி | த் | ழ | ர | கி | ம் | பு | கே | த் |
| பு | ல | வ | ன | ம் | ப | ன் | சு | ழ் | ச |

**முடிவு திகதி 25.5.96**

www.tamilarangam.net

## லக்ஸ்சம்பேர்க். (Luxembourg)




இது மேற்கு ஐரோப்பிய நாடு
களில் ஒன்றாகும். இது பிரா
ன்ஸ், ஜேர்மனி, பெல்சியம்
ஆகிய நாடுகளுக்கு இடை-
யில் அமைந்துளது. இந்நாட்
டின் நிலப்பரப்பு 2,586 சது
கிலோமீற்றர் ஆகும். இங்கு வாழும் மக்கள் தொகை
388,000. இதன் தலைநகரம் லக்ஸ்சம்பேர்க். இங்கு
பாராளுமன்றக் குடியரசு ஆட்சியே நடைபெறுகின்றது
இங்கு புழக்கத்தில் இருக்கும் நாணயத்தின் பெய
Luxemburg Franc.

இங்கு பேசப்படும் மொழிகள் பிரான்ஸ் மொழ
ஜேர்மன் மொழி, லக்ஸ்சம்பேர்க் மொழி என்பன ஆகும்
மக்கள் வழிபடும் சமயம் றோமன் கத்தோலிக்கம். இங்கு
வாழ்கின்ற இனங்கள் லக்ஸ்சம்பேர்க்கர், போர்த்துக்கீச
இத்தாலியர், பிரான்ஸ்சியர், ஜேர்மனியர் ஆகியோர்.

இங்கு நடைபெறும் பிரதான கைத்தொழில்க
இரும்புருக்கு தொழிற்சாலை, இரசாயனத் தொழிற்சாலை
குடிவகை உற்பத்தித் தொழிற்சாலை, உலோக
உற்பத்தித் தொழிற்சாலை, சீமெந்துத் தொழிற்சாலை.

இங்கு பயிரிடப்படுவன காய்கறிவகை, பழவகை
கோதுமை, திரட்சைப்பழம் என்பன.

www.tamilarangam.net

# தமிழ்மொழி

தமிழ் மொழியானது மூவேந்தரான சேர சோழ பாண்டியரால் பேணிக் காக்கப் பட்டு, போற்றி வளர்த்த மொழியாகும். இத்தமிழின் சிறப்பை உலகுக்கு அறியத் தந்தவர்கள் பழம்பெரும் புலவர்களே ஆவார்கள். இந்தமொழியில் வந்ததே வள்ளுவரின் திருக்குறள். இத்திருக்குறளின் மேன்மை அறிந்து, உலகிலுள்ள பலரும் தங்கள் தங்கள் மொழிகளில் திருக்குறளை மொழி பெயர்த்திருக்கிறார்கள். இந்தப் புகழ் வள்ளுவருக்கும் அவர் வளர்த்த தமிழ்மொழிக்குமே உரியது.

"தமிழுக்கு அமுதென்று பேர்
அந்தத் தமிழ் இன்பத் தமிழ்—எங்கள்
உயிருக்கு நேர்

என்றொரு கவிதை உண்டு. அமுதென்பது அமிர்தம் ஆகும். அந்த அமுதம் மக்களுக்குக் கிடைக்கக் கூடியதல்ல. தேவர்கள் உண்பது அது. அதைப் போலவே பெருமை கொண்ட

www.tamilarangam.net

தமிழைப் படித்தால் எவ்வளவு சிறப்பெய்தலாம் என்று சொல்லத் தேவையில்லை. தமிழானது ஒவ்வொரு தமிழனின் உயிருக்கு நிகரானதே ஆகும். தமிழனான ஒருவன் தமிழைப் படிக்காமல் இருப்பானேயானால் அவன் இறந்தவனுக்குச் சமமானவனே ஆவான் என்பது இதிலிருந்து தெளிவாகிறது அல்லவா?

சங்க காலத்தில், சங்கம் உண்டாக்கித் தமிழ் வளர்த்த பெரியவர் நக்கீரர் ஆவார். இறைவனால் இயற்றிய பாடலிலேயே கருத்துப் பிழை இருப்பதை அறிந்து, பாடலை இயற்றியவர் இறைவன் என்பதை அறிந்தும், அப் பிழையை இறைவனுக்கே உணர்த்தியவர். தமிழ்மொழியை முழுவதும் அறிய வேண்டும் என்பதற்காக ஔவையார் விநாயகப் பெருமானிடம்


"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை

நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்– கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே– நீஎனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா“
என்று

வேண்டுகிறார். இன்னும் ஓரிடத்தில் இறைவனைத் “தமிழானவன்“ என்கிறார். இதிலிருந்து தமிழின் பெருமை தெரிகிறதல்லவா!. தமிழ்மொழியின் தனிச் சிறப்பை உணர்த்த ஆறுமுக நாவலர், சுவாமி விபுலானந்தர், சி.வை.தாமோதரம்பிள்ளை, சோமசுந்தரப் புலவர் போன்றவர்கள் தமிழை வளர்க்க் ஈழத்தில் பாடுபட்டனர். “நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்“ என்னும் முதுமொழிக் கிணங்க மன்னர்களும், புலவர்களும் வளர்த்த தமிழை நாம் அறியாமல் இருப்பது வேதனை தரும் விடயமல்லவா?.

–ஜெயந்தி வரதராஜா–

www.tamilarangam.net




# NEKTAR FÜR KINDER

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்